# இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

மண்டல அலுவலகம், ஐடியல் கார்டன் காம்ப்ளக்ஸ், இரண்டாம் தளம்,
ஐந்து ரோடு, சேலம் - 636004. போன் : 0427-2448440, 2448540

# நகை மதிப்பீட்டாளர் தேவை

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சேலம் மண்டலத்தின் கீழ் செயல்படும் சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைந்துள்ள எங்களின் வங்கி கிளைகளுக்கு கமிஷன் முறையில் பணியாற்றுவதற்கு நகை மதிப்பீட்டாளர்கள் தேவை.**

**ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் கீழே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பிக்கலாம்**

1. வயதுவரம்பு: 25 முதல் 65 வரை. பிறப்பு சான்றிதழ் அல்லது வயது வரம்பிற்கு ஆதாரமாக உள்ள ஆவணத்தின் நகல் சமர்ப்பிக்கவும்.
2. கல்வி தகுதி: குறைந்தது எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கல்வி தகுதிக்கான ஆவணம் சமர்ப்பிக்கவும்.
3. விண்ணப்பதாரர் மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் நகை மதிப்பீடு செய்ய பயிற்சி பெற்றிருக்க வேண்டும். பயிற்சி பெற்ற சான்றிதழின் நகல் சமர்ப்பிக்க வேண்டும்
4. நகை மதிப்பீடு செய்வதில் குறைந்த பட்சம் ஐந்து வருட அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். அனுபவ சான்றிதழை சமர்ப்பிக்கவும்.
5. சுய அத்தாட்சிப் பதிவுடன், ஆதார் மற்றும் பான் கார்டு நகல் சமர்ப்பிக்க வேண்டும்
6. 2 புகைப்படத்துடன் கூடிய பயோடேட்டா சமர்ப்பிக்க வேண்டும்

மேற்கண்ட விதிமுறைகளை உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரர்கள், பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் தேவையான ஆவணங்களுடன் மேற்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதி: **24.01.2025**

**குறிப்பு :** விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களின் எல்லைக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்

தேர்வு செய்யப்பட்டவர் சேலம் மண்டலத்தின் கீழ் செயல்படும் எந்த மாவட்டத்தின் கிளையிலும் வங்கியின் தேவைக்கேற்ப கமிஷன் அடிப்படையில், முதல் அல்லது இரண்டாம் நகை மதிப்பீட்டாளராக நியமிக்கப்படுவர்

நேரடி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. பதிவு அஞ்சல் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

நகை மதிப்பீட்டாளர் தேர்வினை தள்ளி வைக்கவோ ரத்து செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

வங்கி நிபந்தனைகளுக்குட்பட்டது.

**மண்டல மேலாளர்,**
**மண்டல அலுவலகம், சேலம்.**